# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :26 April 2025*

கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின்
பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில்  பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா ்த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்
முனைவர் ச.வைத்தீஸ்வரன்

திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்
முனைவர் ஹ.விஜயலட்சுமி

பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்
ப.பிரபு

திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்
சா.ஜனார்த்தனன்

சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்
திருமதி நா.நித்யா

நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்
கி. ராஜ்குமார்

தர்காவும் விளிம்புநிலை மக்களும்
முனைவர் மௌ.அஸ்கர் அலி

இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்
முனைவர் நா. ஜிதேந்திரன்

சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு
ரா.சந்தியா

ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'
ரா.ஹேமா சிவகா

கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்
இரா.கலாவதி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்**
ந.மஞ்சுளா

**மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்**
பத்மினி. S

**EASY LEARNING TECHNIQUES**
PROF. Dr. Er. S. HARI PRASAD

**Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools**
Kanapathipillai Gnanaretnam

**A Comparative Study Of Formal And Non-formal Education Systems**
Shiyani Thevaruban

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**

**The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu**
P.PRAVEENKUMAR

**Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums**
Dr. S.Udhaya Kumar.

**தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்**
முனைவர் செ. சாந்தி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு

*Comparative Study on Nomadic Paanar — Koothar at Sangam Period*

**ப. நந்தினி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்),
(Ref.No.: BDU2010632778705, Dt: 26.04.2022)

**முனைவர் ரா.சுகுமார்**
உதவிப் பேராசிரியர் — ஆய்வு நெறியாளர், தமிழாய்வுத் துறை,
கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர் - 639 006
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க காலத்தில் இசைக்கருவிகளின் வாயிலாகப் பாடல்களைப் பாடியும், அதற்குத் தகுந்தாற் போல நடனமாடியும் மக்களிடம் கலைகளை வளர்த்தவர்கள் பாணர்களும் கூத்தர்களும் ஆவர். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதுதான் இவர்களின் வாழ்க்கையாக இருந்திருக்கிறது. ஊர் ஊராகச் சென்று இயற்கையையும் கடவுளையும் மன்னரையும் நாட்டையும் பற்றி பாடி மக்களைக் கவர்ந்து பரிசு பெற்றுத் தங்களின் வாழ்வாதாரத்தை நடத்தி வந்தனர். இவர்களுக்கிடையில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. வேற்றுமைகளும் உள்ளன. அவ்வேற்றுமைகளை காணமுற்படுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** அலைகுடி, பாணர், கூத்தர், இசைத்திறன், வழித்தோன்றல்.

***Abstract***

*During the Sangam period, singing songs through music and dancing to the people, the styles and kuts are the ones who develop the arts. Their lives have been the lady of all. They went to the town and sang about nature, God, the king and the country and held their livelihood. There are similarities between them. There are also differences. This article is about to be seen.*

***Keywords:*** *Nomadic, Paanar, Koothar, Musical knowledge, Descendant.*

**முன்னுரை**

தமிழர்களின் பாரம்பரியத்தை அடையாளப்படுத்தும் கலைகளில் இசையும் கூத்தும் ஒருமித்து காணப்படுகின்றன. நெஞ்சை அள்ளும் நிகழ்த்துக் கலைகளுள் தெருக்கூத்தும் ஒன்று. இது இசைக் கலையைப் போலவே பழமை வாய்ந்தது. இவ்விரு கலைகளை மட்டுமே தங்களின் முதன்மை ஆதாரமாகக் கொண்டு நாடோடி வாழ்க்கையை மேற்கொண்வர்களாகக் பாணர்களும் கூத்தர்களும் கருதப்பட்டனர். இவர்கள் வாழ்க்கை முறையில் காணப்பட்ட வாழ்வியல் நெறிமுறைகளை, ஆற்றுப்படை நூல்களைக் கொண்டு ஆராய்ந்து, பாணர்-கூத்தரை ஒப்பீடு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பாணர் சொற்பொருள் விளக்கம்**

பண் பாடினோர் பாணர் எனப் பெயர் பெற்றனர். தமிழ்நாட்டுத் தொல் பழங்குடிகளுள் பாணர்கள் ஒருவராவர். இவர்கள் பண் இசைக்கும் தொழிலால் பாணர் என பெயர் பெற்றனர்.

**திவாகர நிகண்டு**

திவாகர நிகண்டு பாணர்களுக்குரியப் பெயர்களாகச் சென்னியர், வயிரியர், சூதர், மாகதர் இன்னிசைக்காரர், மதங்கர், பாணர் என்பனவற்றைக் குறிப்பிடுகிறது. இதனை

**சென்னியர் வயிரியர் சூதர் மாகதர்**

**இன்னிசைக் காரர் மதங்கர் பாணர்''[1]**

என்ற நூற்பா அடிகள் புலப்படுத்துகின்றன.

**கூத்தர், சொற்பொருள் விளக்கம்**

உடலில் மெய்ப்பாடுகள் தோன்ற ஆடப்படும் கலையே கூத்து எனலாம். கூத்து ஆடும் கலைஞர்கள் கூத்தர்கள் என்றழைக்கப்பட்டனர். தொல்காப்பியர் குறிப்பிடும் நான்கு வகையான இசைக் கலைஞர்களுள் கூத்தரும் ஒருவராவர். இவர்கள் ஆடல் பாடல் என்ற இரண்டு வகைகலைகளையும் மேற்கொண்டனர். தனிக்கூத்திலும் கதை தழுவி வரும் கூத்திலும் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். தனியொருவராகக் கூத்து நிகழ்த்துவது தனிக்கூத்து எனப்படும். கதையைத் தழுவி நிகழ்த்தப்படும் கூத்து பல கலைஞர்களால் நிகழ்த்தப்படுவதாகும்.

**திவரகர நிகண்டு குறிப்பிடும் கூத்தர்**

கூத்தர்களுக்கான வேறு சில பெயர்களைத் திவாகர நிகண்டு குறிப்பிட்டுள்ளது. அவை கோடியர் பொருநர், நாடகியர், நிருத்தர், கண்ணுளர், வயிரியர், வினைஞர், நடர் என்பனவாகும். இதனை

**"கோடியர் பொருநர் நாடகியர் நிருத்தர்**
**கண்ணுளர் உயிரியர் வினைஞர் நடர் என்று**
**எண்ணிய பெயர்கள் கூத்தர்க்கு எய்தும்''[2]**

என்ற நூற்பாவின் வாயிலாக அறியலாம்.

**பாணர், கூத்தர் வாழ்க்கை முறை**

சங்க இலக்கிய, ஆற்றுப்படை நூல்களில் பாணர், கூத்தர் வாழ்க்கை முறையானது விரிவாக எடுத்தியம்பப்பட்டுள்ளது. ஆற்றுப்படை நூல்களில் இக்கலைஞர்களின் வருணணைத் திறனும், வறுமையும் ஒன்றோடொன்று பிணைந்ததாகவே காட்டப்பட்டுள்ளது.

''சங்ககாலத்தில் பாணர்கள் நாடோடி மக்களில் ஒரு வகுப்பினர் என்றும், மன்னர்கள் மற்றும் குறுகிய மன்னர்களின் அரண்மனைக்குச் சென்று அவர்களைப் புகழ்ந்து பாடுவதே இவர்களின் பணியாகும். இவர்களுக்கு நிலையான இருப்பிடம் கிடையாது. எப்போதும் நாடோடி வாழ்க்கையே மேற்கொண்டனர்''[3] என்று மு.அருணாச்சலம் குறிப்பிடுகிறார்.

சங்க கால மக்களிடம் பல வகையான கூத்து முறைகள் இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது. குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் முதலிய நான்கு நிலங்களிலும் அந்தந்த நிலத்திற்கென உரிய கூத்தர்கள் வாழ்ந்து கொண்டு அங்கு கூத்துக்களை நிகழ்த்தி வந்தனர் என்பதைச் சங்க நூல்களால் அறியமுடிகிறது.

**அகத்துறையில் கூத்தரும், பாணரும்**

அகத்திணையில் தலைவன், தலைவியரிடையே தூதாகச் செல்லும் வாயில்களில் கூத்தர்களும் பாணர்களும் நீண்ட பயணம் செய்து, செய்தி உரைப்பதற்கு உரியவராகக் கூறப்பட்டுள்ளனர். இதனை

**''நிலம் பெயர்ந்து உரைத்தல் அவள்நிலை உரைத்தல்**
**கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தலை உரிய'' [4]**

என்று தொல்காப்பிய நூற்பா விளக்குகிறது.

அகப்பொருள் விளக்கம், அகத்திணை வாழ்வில் பாணர்க்களுக்குரிய செயல்களாக ஒன்பது செயல்களையும் கூத்தர்களுக்குரிய செயல்களாக எட்டு செயல்களையும் விளக்குகின்றது.

**கற்பில் கூற்று நிகழ்த்துபவர்**

தலைவன் தலைவி கற்பு வாழ்வில் கூற்றிற்குரியவர்களில் கூத்தரும் பாணரும் இடம்பெற்றுள்ளனர் என்பதனை,

**"பாணன் கூத்தன் விறலி பரத்தை**
**•••..**
**தொல்நெறி மரபின் கற்பிற்குரியவர்"[5]**

என்ற தொல்காப்பிய நூற்பா விளக்கி நிற்கிறது.

"கூத்தர் என்பார் தலைவனுக்கு இன்றியமையாதக் கூத்து நடத்தும் ஆண்கள். இவர்கள் தலைவன் தலைவியரின் கற்புநெறியின் வாயில்களாகச் செயற்படுவர்"[6] என்று சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ளார்.

அகத்திணையில் பிற வாயில்களை விட கூத்தரும் பாணரும் நிலம் பெயர்ந்து சென்று உரைக்கும் வாயில்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். ஊர் ஊராக நாடு நாடாக அலைந்து திரிபவர் ஆகையால் வழியினை எளிதில் அறிந்து கொள்ளவும் பயணிக்கும் திறமையும் அறிவும் இவர்களுக்கு எளிது என்பதால் இக்கலைஞர்களின் நாடோடி வாழ்க்கைப் போக்கே, தலைவன் தலைவியரின் அக வாழ்க்கையின் வாயில்களாக முக்கியத்துவத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

**கூத்தர், பாணர்-இசைத்திறன்**

பொதுவாகப் பாணர்கள் இசைத்திறமை மிக்கவர்களாகவே சங்க இலக்கியங்களில் காட்டப்படுகின்றனர். கூத்தர் இசைத்திறனுடன், நடனத்திறனும் உடையவர். உயர்ந்த குடியில் பிறந்த மக்களுக்கும் இசை ஆர்வலர்களுக்கும் பெரும்பாணர்கள் யாழிசைக் கற்பித்துள்ளனர். பாணர்களின் முதன்மையான இசைக் கருவி யாழ். கூத்தர்கள் பல இசைக்கருவிகளை தங்களிடம் வைத்திருந்தனர்.

பெரும்பாணாற்றுப்படையில் குறிப்பிடப்படும் பாணனின் யாழானது பேரியாழ் என்றழைக்கப்பட்டது. கூத்தராற்றுபடையில் பேரியாழின் அமைப்பு யாழின் வருணனை வழியாக விளக்கப்பட்டுள்ளது. கூத்தராற்றுப்படையில் கூத்தர்களின் இசைகருவிகள், வரிசைபடுத்தப்பட்டுள்ளன. இதனை

**"திண்வார் விசித்த முழவொடு ஆகுளி**
**நுண்ணுருக் குற்ற விளங்கடர் பாண்டில்**
**•••**
**நொடிதரு பாணிய பதலையும் பிறவும்"[7]**

என்று, மலைபடுகடாம் வரிகள் விளக்குகின்றன.

பாணர்களின் தொழிலில் பாட்டு இசை முதலான அறிவு நிலைகளில் ஒருவர் அடைந்திருக்கக்கூடிய மேம்பாட்டிற்கு ஏற்ப அவர்களுடைய தொழில் முனைப்பும் வருமானமும் பரிசில்களும் கிடைக்கப் பெற்றன.

கூத்தர்கள் தங்களின் முதன்மை ஆதாரமான இசைக்கருவியையும், நடனத்தையும் கொண்டு வாழ்ந்தனர். பாணர்கள் பண் பாடி பரிசில் பெற்றனர். கூத்தர்கள் பண் பாடியும், நடனமாடியும் கூத்துகள் நிகழ்த்தியும் பரிசில் பெற்று வாழ்ந்து வந்தனர்.

**இன்றைய காலகட்டத்தில் பாணர் கூத்தர் வழித்தோன்றல்கள்**

சங்க காலத்தில் இசைக்கலைஞர்களாகக் கருதப்பட்ட பாணர் கூத்தர், பிற்காலத்தில் இழிநிலைக்கு தள்ளப்பட்டனர். இவர்கள் நாடோடி வாழ்கையை மேற்கொண்டதைப் போலவே இன்றும் இவர்களின் வழித்தோன்றல்களாகக் கருதப்படும் இச்சமூக மக்கள் நாடோடி மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

**கூத்தர் வழித்தோன்றல்கள்**

சங்க காலத்தில் நாடோடி வாழ்க்கையை வாழ்ந்த கூத்தர்களின் வழித்தோன்றலாக இன்று “மண்டிகர்” என்ற இனத்தினர் காணப்படுகின்றனர். தமிழகத்தின் தென் மாவட்டங்களில் வாழும் மராட்டிய சமூகத்தின் ஒரு பிரிவினரான மண்டிகர் தொடர்ந்து இடம்விட்டு இடம் சென்று “தோற்பாவை கூத்து” நடத்தி வருகின்றனர்.

”மண்டிகர் இனப் பெண்கள் 50 ஆண்டுகளுக்கு முன்னர் பச்சைக் குத்தும் தொழிலை மேற்கொண்டுள்ளனர்”[8] என்பதைப் பக்தவத்சல பாரதி தன்னுடைய நூலில் பதிவிட்டுள்ளார்.

1. மண்டிகர் — தோற்பாவைக் கூத்து
2. பதானியர் — கழைக் கூத்தாடிகள்

**பாணர் வழித்தோன்றல்**

சங்ககாலப் பாணர்களின் வழித் தோன்றல்களாகக் குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்த மக்கள் இன்றளவும் வாழ்ந்து வருகின்றனர். சங்ககாலப் பாணர்களின் வழக்காறுகளோடு ஒத்துக் காணப்படுவதால் இவர்கள் பாணர்களின் வழித்தோன்றலாகக் கருதப்படுகின்றனர்.

1. சாதிப்பிள்ளை
2. முடவாண்டி
3. மைலாரி
4. வீர முஷ்பி
5. பான்னம்பலத்தார்
6. பட்டராசு
7. எடக்கூத்தாடி
8. பிச்சி குண்டா, பிச்சி குண்ட்ல
9. பொம்ப நாயுடு
10. பறைத் தொம்பன்
11. மாதிகமாஸ்தி
12. பக்கீர்

என்று பல்வேறு பெயர்களில் பாணர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மட்டுமின்றி வடபகுதியில் ஆசாதி சரடகல்லு, சிந்தோல்லு, கச்சி, பாசலர், பாமுல பர்தான், பரிகி, முக்குல, பிங்கியர் என்று இன்றும் பலப்பெயர்களில் பாணர்களின் வழித்தோன்றல்கள் வாழ்ந்து வருகின்றனர்.

**முடிவுரை**

சங்ககால ஆற்றுப்படை நூல்களில் காணப்படும் இசைக்கலைஞர்களான பாணர்கள் கூத்தர்களும் சிற்சில இடங்களில் மட்டுமே வேறுபட்டு காணப்படுகின்றனர் என்றபொழுதும் அவர்களின் இசைத்திறன், கருவிகள் அகத்துறையில் அவர்களின் செயல்கள் போன்று அனைத்து இடங்களிலும் கூத்தரும் பாணர்களும் ஒருமித்தே காட்டப்படுகின்றனர். இவர்கள் இருவரின் பரிசில் வாழ்க்கையானது வறுமையைக் கடந்தும், இசைத்திறனை முதன்மையாகக் கொண்டும், இன்றளவும் நாடோடி வாழ்க்கையாகவே காணப்படுகின்றது.

சங்ககால பாணரும் கூத்தரும் வறுமையை மட்டுமே பார்த்தவர்களாகவும் மன்னர்களையும் வள்ளல்களையும் கண்ட பின்னரே அவர்கள் வாழ்க்கையில் வறுமையே இனி இல்லை என்னுமளவிற்குப் பரிசுப் பொருள்களைப் பெற்றனர். அகத்துறையில் காணப்படும் பாணர் கூத்தர் தூது வாயில் போன்ற வேலைகளை மட்டும் செய்பவராகவும் புறத்துறையில் இசைத்திறன் மிக்கவராகவும், மன்னரைப் புகழ்ந்து பாடி பரிசில் பெறும் அளவிற்கு புலமை வாய்ந்தவராகவும் காட்டப்பட்டுள்ளனர்.

**சான்றெண் குறிப்புகள்**

1. திவாகர நிகண்டு (ப.ஆ) தாண்டவராய முதலியார். நூ.213
2. மேலது. நூ.265

3. ***Musical Tradition of Tamilnadu, M. Arunachalam. p.22*** *[The panar of the period were a class of nomadic people who were dedicated to dance and song. A thousand years after the period, their men and women came to as the melakkarar and the talippenduhal. They had no fixed home. They were always touring. The panar visited the courts of kings and petty chiefs and enlivened them by their dance any song and lived through the munificence of these patrons]*
4. தொல்காப்பியம், இளம்பூரணனார் (உ.ஆ). கற்பியல். நூ.28
5. மேலது.பொருள். நூ.167
6. அகத்திணை கொள்கைகள், ந.சுப்புரெட்டியார். ப.407.
7. மலைபடுகடாம், ப.சரவணன் (உ.ஆ) பா.3-11
8. தமிழகத்தில் நாடோடிகள், பக்தவத்சலபாரதி, ப.116

**துணைநூற் பட்டியல்**


*Arunachalam, M., Musical Tradition of Tamilnadu, Edited by. Cunjithapatham International society for the investigation of ancient civilizations, Madras.*

இளம்பூரணனார் (உ.ஆ.), தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு, சாரதா பதிப்பகம் சென்னை.

சரவணன், ப. (உ.ஆ.), மலைபடுகடாம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

சுப்புரெட்டியார், ந., அகத்திணை கொள்கைகள், பாரி நிலையம், சென்னை.

\

தாண்டவராய முதலியார் (ப.ஆ.), திவாகர நிகண்டு, வேதவிநாயகர் அச்சகம், சென்னை

பக்தவத்சல பாரதி, தமிழகத்தில் நாடோடிகள், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.


## *References*


*Arunachalam, M., Musical Tradition of Tamilnadu, Edited by. Cunjithapatham International society for the investigation of ancient civilizations, Madras.*

*Ilampooranar (Ed.), Tholkappiyam, Porulathikaram, Kazhaga Veliyeedu, Saratha Pathippagam, Chennai.*

*Saravanan, B. (Ed.), Malaipadukadam, Tamilnadu Paadanool matrum Kalviyiyal Panikal Kazhagam, Chennai.*

*Subbureddiyar, N., Akathinai Kolkaikal, Paari Nilayam, Chennai.*

*Thandavaraya Mudaliyar (Ed.), Thivakara Nikandu, Vedavinayar Achagam, Chennai.*

*Bakthavathchala Bharathi, Tamilagathil Natodikal, Puducherry Mozhiyiyal Panpaattu Aaraichi Niruvanam, Puducherry.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com